# 7 CHURCHES OF REVELATION

1. Ephesus
2. Smyrna
3. Pergamos
4. Thyatira
5. Sardis
6. Philadelphia
7. Laodicea

Zoho meeting by
N.Rajesh Jesudoss Hynes




**VNR DT EU/EGF**
**BIBLE STUDY**
**April 19th to 26th**
**7:30 to 8:30 pm**

Activate Windows
Go to Settings to

# ஆசியாவிலிருக்கிற 7 சபைகள்

## வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்கள்

| | |
|---|---|
| அறிமுகம் | வெளி 1:1-20 |
| எபேசு | வெளி 2:1-7 |
| சிமிர்னா | வெளி 2:8-11 |
| பெர்கமு | வெளி 2:12-17 |
| தியத்தீரா | வெளி 2:18-29 |
| சர்தை | வெளி 3:1-6 |
| பிலதெல்பியா | வெளி 3:7-13 |
| லவோதிக்கேயா | வெளி 3:14-22 |

# நூல் அறிமுகம்

- சாத்தான் கடுமையாக வெறுக்கும் புத்தகம்! -மார்ட்டின் லூதர்
- ஆதியாகமம் புத்தகத்திற்கும் வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.
- ஆட்டுக்குட்டியானவரின் மாபெரும் வெற்றியை பறைசாற்றுகிறது புத்தகம்
- ஜெயம் பெற்று வாழ விரும்புகிறவர்களுக்கு எழுதப்பட்ட புத்தகம்!
- ஆசீர்வாதத்தின் புத்தகம்!

# எப்பொழுது, யாரால் எழுதப்பட்டது?

- ரோமப் பேரரசன் டொமிஷியன் அரசாண்ட காலம் அது (கிபி 95-ல்)!

- அப்போஸ்தலர் அனைவரும் கொடூரமாக கொலை செய்யப்பட்ட நேரம் அது!

- உபத்திரவ படுக்கிறவர்களுக்காக, உபத்திரவத்தின் நடுவில், 96 வயது நிரம்பிய யோவான் எழுதியது (1:9)!

# வரலாற்று பின்னணி




- எருசலேமை கிபி 70-ல் ரோமப் பேரரசன் மகன் தளபதி டைட்டஸ் கைப்பற்றினான்.
- கிபி 79-ல் டைட்டஸ் ரோமப் பேரரசனான். இரண்டே ஆண்டுகளில் இறந்துபோனான்.
- டைட்ட சின் சகோதரனான டொமிஷியன் கிபி 81-ல் பேரரசனான். ஆசியா முழுவதும் பேரரசர் வழிபாட்டை கொண்டு வந்தான்

# எங்கிருந்து எழுதப்பட்டது?

- டொமிஷியன் சிலைக்கு தூபம் காட்ட மறுத்த யோவான் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்!
- 96 வயது நிறைந்த யோவான் துன்புறுத்தப்பட்டார்.
- வயதான அவர் எல்லோராலும் மறக்கப்பட்டார். தனிமைப்படுத்தப்பட்டார்.
- சரியான ஆகாரம் இன்றி தவித்தார். வசதியற்ற குகையிலே இருட்டான குகையிலே படுத்து உறங்கினார். உபத்திரவத்தின் நடுவில், யோவான் எழுதியது

# யோவான் தங்கி இருந்த குகை



# நாம் கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்கள்

- பேரரசரை கடவுளாக யோவான் வழிபட மறுத்தார்
- உலகத்தோடு ஒத்துப்போகாத பிடிவாதமான நம்பிக்கை நமக்கு தேவை
- விலைக்கிரயம் கொடுக்கும் சீஷத்துவம்
- புவியியல் இருப்பிட மாற்றம் நம்மை ஆண்டவரை விட்டு பிரிக்க முடியாது!
- நமது வாழ்வின் பத்மு தீவுககளை தேவன் ஆசீர்வாதமாக மாற்ற முடியும்



# திறவுகோல் வசனம் வெளி. 1:19

**நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது;**

## பிரிவுகள்

அ. **கண்டவைகள்** : வெளி. 1

ஆ. **இருக்கிறவைகள்** : வெளி. 2,3

இ. **சம்பவிப்பவைகள்** : வெளி. 4-22

அ. **ஆண்டவரின் காட்சி** : வெளி. 1

ஆ. **ஆவியானவரின் சாட்சி** : வெளி. 2,3

இ. **ஆண்டவரின் ஆட்சி** : வெளி. 4-22

# அறிமுகம்: வெளி. 1 : 1-13



# முகவுரை: வெளி. 1 : 1-3

1. சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்.

2. இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்.

3. இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.

# வாழ்த்துரை: வெளி. 1 : 4-8

4. யோவான் ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கும்
எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும்
வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்திற்கு
முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும்,
5. உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து
முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய
இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும்
சமாதானமும் உண்டாவதாக.
6. நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே
நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய
பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும்
ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும்
என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

# வாழ்த்துரை: வெளி. 1 : 4-8

7. இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும்
அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்
காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும்
அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும்
ஆமென்.
8. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய
சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும்,
ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று
திருவுளம்பற்றுகிறார்

# தரிசன உரை: வெளி. 1 : 9-13

9. உங்கள் சகோதரனும் இயேசு கிறிஸ்துவினிமித்தம்
வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும்
அவருடைய பொறுமைக்கும் உங்கள்
உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான்
தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய
சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே இருந்தேன்.
10. கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்;
அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம்போன்ற
பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்.
11. அது நான் அல்பாவும் ஒமெகாவும், முந்தினவரும்
பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு
புஸ்தகத்தில் எழுதி,

# தரிசன உரை: வெளி. 1 : 9-13

ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு,
தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா
என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும்
அனுப்பு என்று விளம்பினது.

12. அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத்
திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன்
குத்துவிளக்குகளையும்,
13. அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி
தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த
மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்.

# அறிமுகம்: வெளி. முதல் அதிகாரம்



# அ. முகவுரை - வெளி. 1 : 1-3

- **தேவனே** நமக்கு வெளிப்படுத்தி காண்பிக்க வேண்டும் (வ 1)

  Apocalypse= Revelation = Unveiling

- தனது **அடிமைகளுக்கு** தேவன் காண்பிக்கிறார் (வ 1)
- தேவனுடைய சத்திய வசனங்கள் (வ 2)
- **இயேசு கிறிஸ்துவின்** காட்சியையே பிரகடனம் செய்கிறது (வ 2)
- ஆசீர்வாதம் வாக்கு அளிக்கப்படுகிறது (வ3)

# ஆ. வாழ்த்துரை- வெளி. 1 : 4-8

- முதலாவது கிருபை பின்பு சமாதானம் (வ 5)
- திரியேக தேவனுடைய நாமத்தினால் வாழ்த்து (வ 4,5)
  - நம்மிடத்தில் அன்புகூர்ந்தார்
  - நம்மை கழுவினார் – “தமது இரத்தத்தினாலே”
  - நம்மை உயர்த்தினார்

  இதோ, மேகங்களுடனே வருகிறார் (வ 7)

1. அவர் வரும் முறை
2. பகிரங்கமாக வரும் முறை
3. சகல மக்களின் புலம்பல்கள்

# இ. தரிசன உரை - வெளி. 1 : 9-13

- உங்கள் சகோதரனும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான்
- தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும்
- கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்
- எக்காளசத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்
- நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்


மிக்க நன்றி!


PRAYER